1982 மார்ச் 3]

திட்டங்கள் நெல்லை மாவட்டத்தில் 30 ஆண்டுகளுக்கு மேலாகக் கைவிடப்பட்டு இருக்கின்றவைகள் தற்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த மேக்கரை அனுமான் நதியிலே கட்டப்படுகின்ற அணையால் தென்காசி வட்டத்தில் உள்ள கீழ்ப்பகுதியில் உள்ளவர்கள் பாதிக்கப்படக்கூடும் என்று தெரிவித்து மனுக்கள் ஏதேனும் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி வந்திருக்குமானால் அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதன் மூலம் பயன்படக்கூடிய எந்த ஒரு விவசாய நிலமும் பாதிக்கப்படாத அளவுக்குத்தான் இந்தத் திட்டங்கள் போடப்பட்டுள்ளன. இதிலே முதலிலே 2139·08 ஏக்கர் இருபோக நிலங்களுக்குத் தேவையான நீர் உறுதி செய்யப்பட்ட பின்னர்தான் மீதியுள்ள நிலங்களுக்குக் கொடுக்கிறோம். எனவே யாருக்கும் பாதிப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவள்ளியங்குடி நரிக்குடி கிராமத்திற்கான பாசன வாய்க்கால்.

*வினா எண். 335—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் வட்டம் திருவள்ளியங்குடி, நரிக்குடி கிராமத்திற்கான நீர்ப்பாசன வாய்க்கால் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் இடித்து தூர்க்கப்பட்டு இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) இந்த வடிகாலை சீரமைப்பதற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1982-83-ஆம் ஆண்டுக்கான காவிரி வளர்ச்சி திட்டப் பணிகளில் ஒன்றாக இது சேர்க்கப்பட்டு அரசின் ஒப்புதல் பெற்று பணிகள் துவக்கப்படும். என்று தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார்.

[1982 மார்ச் 3

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே ஒரு தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். இது வடிகால் அல்ல, ஒரு வாய்க்கால். இந்த வாய்க்கால் 1974–75-ல் வெட்டப்பட்டு, ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்பட்டு, நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி அளித்தது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னால் இந்த வாய்க்கால் சில சமூக விரோதிகளால் தூர்க்கப்பட்டு, அதனால் 2, 3 கிராமங்கள் பாசன வசதியற்று இருக்கின்றன. பொதுப் பணித் துறையினர் அந்த சமூக விரோதிகள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்தக் கிராமங்கள் இப்போது வறட்சியால் பாதிக்கும் நிலை இருக்கிறது. எனவே அந்தக் கிராமங்களுக்கு மீண்டும் பாசன வசதி அளிக்க அந்த வாய்க்கால் புதுப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, என்னிடம் இருக்கிற குறிப்பின்படி, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருவள்ளியங்குடி, நரிக்குடி கிராமங்களுக்கான வடிகால் இது. இந்த விவரத்தைத்தான் கொடுத்து இருக்கிறார்கள். இது தவறான தகவல் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதினால் திரும்பவும் ஒரு கருத்தைப் பெற்றுதான் பதில் சொல்ல முடியும். இதிலே தவறு நடந்து இருக்கிறது என்று சொன்னார்கள். அது விதிமுறைகளின்படி கவனிக்கப்படும். 1982–83-ல் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள இருக்கிறோம். அதற்காக மகிழ்ச்சி அடைவார்கள் என்று கருதுகிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, இந்த வாய்க்காலுக்கான மதிப்பீடு சாங்ஷன் செய்யப்பட்டுவிட்டதா, எவ்வளவு மதிப்பீடு, இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே நிறைவேற்றித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, இது சம்பந்தமான மானியக் கோரிக்கை வரும்போது பதில் சொல்கிறேன்.

திருவள்ளூர் அருகே சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 336—திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க் ண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் திருவள்ளூர் அருகே புதிய சர்க்கரை ஆலை நிறுவ அரசு ஆலோசித்துக் கொண்டுள்ளதா ?